**செய்தி வெளியீடு எண்: 898** **நாள்: 11.12.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், நாகப்பட்டினம், திருவள்ளூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 5 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 பாலங்களை திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. பல்வேறு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வட்டார அளவில், அந்தந்த வட்டாரத்திற்கு தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் திகழ்கின்றன. அந்தந்த வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள், தங்களின் அடிப்படை தேவைகளான வீட்டு வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதி மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அணுக வேண்டியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 25 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றிய அலுவலக பயன்பாட்டிற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், தரங்கம்பாடி – மணக்குடி சாலையில் 1 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், தேசிய நெடுஞ்சாலை – பனப்பாக்கம் சாலையில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; இராமகிருஷ்ணராஜ்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அம்மையார் குப்பம் – மேல் மோசூர் சாலையில் 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறு பாலம்; பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராமச்சந்திரபுரம் – கல்லமேட்டுகாலனி சாலையில் 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம்; திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், பேரளம் – அன்னியூர் சாலையில் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 7 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் மற்றும் 5 பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் முனைவர் கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.12.2018.**